SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

# மாதாந்த அறிக்கை

ஆடி, 2013

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu
067 2277475
0772242410

No. 19, Saravana Road
Kallady Batticaloa.
0772242407
0652225620

60" Arasady Road
Jaffna.
0212226700
0772242394

18/3A Anai Road
Kaneshapuram
0772242401

## இதழின் உள்ளே

1. மட்டக்களப்பு
2. அம்பாறை
3. யாழ்

ஆகிய மாவட்டங்களின் செயற்பாடுகள் கீழ்வருமாறு

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

**எதிர்காலத்தல் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல் .**
**(Create a conducive Society for Good Environment for the Future).**

காலநிலைமாற்றமும் சூழல் பாதுகாப்பும் (Climate Change & Environmental protection )

அந்த வகையில் வீதி நடுப்பகுதியில் நடப்பட்ட மரங்களில் வளர்ச்சி குன்றிய மரங்கள் அகற்றப்பட்டு பசளை கலந்து மண் இடப்பட்டுவருகின்றது. அந்தவகையில் இம்மாதம் தொடச்சியாக மரங்கள் பராமரிக்கப்பட்டு வருவதுடன் காற்றினால் பழுதடைந்த விழிப்புணர்வு பதாதைகள் புதியதாக பொருத்தப்பட்டுள்ளது.

ஆரையம்பதி பிரதேச சபையினரின் வேண்டுகோளுக்கிணங்க வீதியோரத்தில் மரங்கள் நடுவதற்கான குழிகள் அகளப்பட்டு வருகின்றது.

அனர்த்த முகாமைத்துவம்

**SOND** நிறுவனம் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் கிராமமட்டத்தில் அனர்த்தம் தொடர்பிலான விழிப்புணர்வினை வழங்கி கிராமந்தோறும் அனர்த்த முகாமைத்துவக் குழுக்களை உருவாக்கி அனர்த்தத்தினை எதிர்கொள்வதற்கான முன்னாயத்த நிலையினை உருவாக்குகின்ற செயற்பாடுகளை தெரிவுசெய்யப்பட்ட 7 கிராமசேவகர் பிரிவுகளில் செய்து வருகின்றது.

2013.07.10 அன்று பிரதேச செயலகத்தில் திட்டத்தினை தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் திட்டம் நடைமுறைப்படுத்தும் கிராமங்களின் கிராமசேவை உத்தியோகஸ்தர்கள் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகஸ்தர்,பிரதேச அனர்த்த முகாமைத்துவ உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இதனைத் தொடர்ந்து கிராம சேவை உத்தியோகஸ்தர் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகஸ்தர்,பிரதேச அனர்த்த முகாமைத்துவ உத்தியோகஸ்தர் ஆகியோரின் முன்னிலையில் தெரிவுசெய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் கிராம மட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் உருவாக்கப்பட்டது.

## கணனி வகுப்பு

மக்கள் மத்தியில் கணனி அறிவினை மேம்படுத்தும் நோக்கிற்காக எங்களுடைய அலுவலகத்தினால் சிறுவர், இளையோர் போன்ற ஏனையவர்களுக்கு கணனி வகுப்பு நடாத்தப்பட்டு வருகின்றது. இதன் பிரகாரம் இம் மாதம் 22 பேர் கணனி வகுப்பில் பயன் அடைந்துள்ளார்கள். மேலும் இம்மாதம் கணனி வகுப்பிற்கு 4பேர் புதிதாக சேர்ந்துள்ளார்.

SOND

# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல் .

பகுப்பாய்வு அடிப்படையில் சமூகத் தேவைகளை வெளிக்கொண்டுவருவதற்கான கூட்டுச்செயற்பாடுகளுக்கு உதவிசெய்தல்.

சமூகப் பொறுப்புக்கூறல் பயிற்சியும் கள மதிப்பீடும்

சமூகப் பொறுப்புக்கூறல் செயலமர்வானது ஒரு நாள் பயிற்சியாகவும் மற்றைய நாள் களத் தரிசிப்பாகவும் இருநாள் கொண்ட நிகழ்வாக அக்கரைப்பற்று லொயிட்ஸ் பயிற்சி மண்டபத்திலே **17,18/07/2013** ஆகிய தினங்களில் நடைபெற்றது.


பிரதேச சபைகள் மற்றும் சமூக சாதனை அட்டை தொடர்பாகத் தெளிவுபடுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பிரதேச சபைகளின் செயற்பாடுகளை மதிப்பீடும் கருவி “ சமூக சாதனை அட்டை” யினை களத்தில் எவ்வாறு மேற்கொள்ளல் என்பது தொடர்பான திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டு இரண்டாம் நாள் ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கு உட்பட்ட 08 கிராமங்களில் இச் சமூக சாதனை அட்டையானது பரீட்சிக்கப்பட்டது.

சமூகப் பொறுப்புக்கூறல் பயிற்சியும் கள மதிப்பீட்டின் தொடர் நடவடிக்கையும்.

**Social Accountability** தொடர்பாக இதுவரை நடைபெற்ற வேலைத்திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் இவ் வேலைத்திட்டத்தினை எவ்வாறு முன்னெடுத்தல் என்பது தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு **Diakonia** அலுவலகத்தில் **29/07/2013** அன்று காலை **10.00** மணிதொடக்கம் பி.ப. **04.00** மணிவரை திரு. சொர்ணலிங்கம் அவர்களின் இலகுபடுத்தலுடன் நடைபெற்றது. இதன்பொழுது இதுவரை முடிக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர் என்பது தொடர்பாகவும் திட்டமிடப்பட்டது.

சேதன விவசாயப் பண்ணை

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் கண்ணகிபுரம் கிராமத்தில் செயற்பட்டுவரும் கண்ணகி மேட்டுநிலப் பயிர்ச்செய்கையாளர் சங்கத்தினூடாக **SOND** அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சேதன விவசாயப் பண்ணை அமைத்தல் திட்டத்தின் கீழ் மேற்படிச் சங்கத்தின் நிர்வாக சபையுடனான கலந்துரையாடல் **26/07/2013** அன்று மேற்கொள்ளப்பட்டு அதனைத் தொடர்ந்து **10’x 6’** அளவுடைய சேதனப் பசளை தயாரிப்பதற்கான கட்டிடமும் சங்க நிர்வாகத்தினரின் ஒத்துழைப்புடன் கட்டப்பட்டுவருகின்றது.







SOND

# நிதியின்றிய செயற்திட்டங்கள்

அரச சார்பற்ற நிறுவனமென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

இம் மாதம் நடைபெற்ற கலந்துரையாடல் விபரம்.

இம் மாதம் காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் 4 கலந்துரையாடலும், 4 திரைப்படக்காட்சி காண்பித்தலும் நடாத்தப்பட்டது இதில் 48 சிறுவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

நடைபெற்ற கலந்துரையாடலின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள்.

1. இனிவரும் காலங்களில் கணனி தியேரி வகுப்பு நடைபெறும் எனவும் மற்றும் கணனி தியேரி வகுப்பு நடைபெற்று அடுத்து வாராந்த கலந்துரையாடலின் போது கணனி பரீட்சை நடைபெறும் என கூறப்பட்டது.
2. 15 சிறுவர்களுக்கு கணனி பரீட்சை நடாத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டது. இதில் அதிக கூடிய புள்ளிகளை பெற்றுள்ள பிரவீனாவிற்கு பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. எதிர் வரும் மாதம் முதற் ஞாயிற்றுக் கிழமை கலந்துரையாடலுக்கு சமூகமளிக்கும் போது ஒவ்வொரு சிறுவர்களும் நீரின் பயன்பாடுகள் தொடர்பான செயற்பாடு ஒன்றினை தயாரித்து வருமாறு கூறப்பட்டது.

01. சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. 2013.07.07,14ம் திகதிகள் அன்று 05 சிறுவர்கள் எமது அமைப்பிற்கு வருகை தந்து பாவனையற்ற கடதாசியினை பயன்படுத்தி 100 குளுசைப்பக்கற்கள் தயாரித்து வழங்கியுள்ளார்கள்.

02. இம் மாதம் காந்தி கழக சிறுவர்களினால் 04 நடமாடும் நூலக சேவை மேற்கொள்ளப்பட்டது. இதில் 243 புத்தகங்கள் வெளிச் செல்லப்பட்டுள்ளது,

02. SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. சிறுவர்களின் ஓய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக 03 வகையான விளையாட்டுப்பொருட்கள் 05 தடவைகள் வழங்கப்பட்டது.





SOND

## கணணி வகுப்பு

சிறுவர்களுடைய கணனிப் பாவனையை அதிகரிக்கும் நோக்கத்தில் எமது அமைப்பில் கணனி செயல்முறை வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. இதனடிப்படையில் இம் மாதம் 7 பெண்கள் 5 ஆண்கள் உட்பட 12 பேர் 10 தடவை கணணியைப் பயன்படுத்தியுள்ளார்கள்.



## தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. மேலும் எமது அமைப்பின் கீழ் செயற்படும் சிறுவர்கழக சிறுவர்களாலும் நடமாடும் நூலக சேவை நடைமுறைப்படுத்துகின்றோம். இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 6 தலைப்பில் 266 புத்தகங்களை பயன்படுத்தியுள்ளார்கள்.



SOND

# யாழ் மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## மிதி வெடி அபாயக் கல்விச் செயற்றிட்டம்

மிதிவெடி அபாயக்கல்வி செயற்பாட்டுடன் தொடர்புபட்ட கண்காட்சியானது 2013.08.25.26 ம் திகதிகளில் கிளிநொச்சி பிரதேசத்தில் நடாத்தப்பட்டது

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நான்கு கிராமங்களிலும் மொத்தமாக 61 மிதிவெடி அபாயக் கல்வி தொடர்பான பதாதைகள் ஒட்டப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலைக்கான MRE செயற்பாடுகளின் பொழுதும் மற்றும் சிறுவர் கழகங்களுடனான MRE செயற்பாடுகளின் பொழுதும் 50 மீனாஎன்னும் தலைப்பிலான புத்தகங்களும் வினியோகிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வட மாகாண சபையினால் நடாத்தப்பட்ட வர்த்தகக் கண்காட்சியில் கலந்துகொண்டதுடன் ஏனைய MRE தொடர்பாக வேலை செய்துவரும் அமைப்புக்களும் கலந்துகொண்டு பார்வையாளர்களுக்கு தெளிவுட்டினார்கள். இக் கண்காட்சிக்கு பாடசாலை மாணவர்கள் உட்பட 12000 க்கும் அதிகமான மக்கள் பார்வையிட்டதுடன் அது தொடர்பான தெளிவினையும் மற்றும் விழிப்புணர்வினையும் பெற்றுள்ளனர். அத்துடன் MRE தொடர்பான பிரசுரங்களையும் மற்றும் நேர அட்டவணைகளையும் பெற்றுச்சென்றனர்.

100 MRE தொடர்பான தொப்பிகள் அச்சிடப்பட்டு அவை MRE திட்டப் பணியாளர்கள் அனைவரிற்கும் வழங்கப்பட்டுள்ளது.










## தொலைநோக்கு

"புதிய சமூகம் உருவாக்குவோம்"

## பணிநோக்கு

.சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.